R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
June 2020







Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Tuesday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 ஜுன் 2020 கனி 7

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்;
அவைகளால் உங்களுக்கு
நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

"கிறிஸ்தவம்
இவ்வுலக ராஜ்யத்தைச்
சாராமல் வளர்ச்சியடையும்,
ஆனால்
கிறிஸ்தவத்தைச் சாராமல்
இவ்வுலக ராஜ்யம்
வளர்ச்சியடையாது"

**பாடம்** : 7

**தலைப்பு** : ஜீவஊற்று - The Fountain of Life


**வேத வாசிப்பு** : சங்கீதம் 36

| | |
|---|---|
| 1. ஜீவஊற்று உம்மிடத்தில் | - சங்.36:9 |
| (எ.கா) என் ஜனங்கள் இரண்டு | - எரே.2:13 |
| 2. கர்த்தருக்குப் பயப்படுதல் | - நீதி.14:27 |
| (எ.கா) தேவனுக்குப் பயந்து | - யோபு 1:8 |
| 3. புத்தி தன்னை உடையவர்களுக்கு | - நீதி.16:22 |
| (எ.கா) சாலமோனின் ஞானம் | - 1இரா.4:30 |
| 4. புறப்படும் இடம் இருதயம் | - நீதி.4:23 |
| (எ.கா) உன் தேவனாகிய | - மாற்.12:30,31 |
| 5. ஞானவான்களின்போதகம் | - நீதி.13:14 |
| (எ.கா) நித்திய ஜீவவசனங்கள் | - யோவா.6:68,69 |




the word of christ இருபந்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்
YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 238

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. முப்பத்தெட்டு வருஷ வியாதியஸ்தனை சொஸ்தமாக்கிய பின்பு இயேசு அவனை எங்கே கண்டார்?
2. மேட்டிமையானவர்களைத் தாழ்த்த, உம்முடைய கண்கள் அவர்களுக்கு விரோதமாய்த் திருப்பப்பட்டிருக்கிறது என்று பாடிய அரசன் யார்?
3. தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று நினைத்தவன் யார்?
4. எந்த ராஜாவுடைய மனைவி தன்னை அந்நிய ஸ்திரீயாக காண்பிக்க எந்த தீர்க்கதரிசியினுடைய வீட்டிற்குள் பிரவேசித்தாள்?
5. பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று என்னை வஞ்சித்தது என எழுதும் அப்போஸ்தலன் யார்?
6. சீரியருடைய இராணுவத்திற்குப்போக இருட்டோடே எழுந்துபோன குஷ்டரோகிகள் எத்தனைபேர்?
7. இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச் செய்கிறதற்கு சபையில் எப்படிப்பட்டவர்களை நியமிக்கவேண்டுமென பவுல் எழுதுகிறார்?
8. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணித் துதித்துப் புகழுகிறதற்கு லேவியரில் தாவீதால் நியமிக்கப்பட்ட தலைவன் யார்?
9. கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கிவிடப்பட்டு, அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன் கைக்கு தப்பிய அப்போஸ்தலன் யார்?
10. பஸ்காவை ஆசரிக்கும்படி எருசலேமுக்கு வாருங்கள் என்று நிருபங்களை எழுதி அஞ்சல்காரர் வசம் கொடுத்து இஸ்ரவேல் யூதா எங்கும் சென்று சொல்ல சொன்ன ராஜா யார்?

## வேதாகம ஆய்வு... 23




ஆபேல் - Abel

1. ஆபேல் என்றால் சுவாசம்
2. ஆதாமின் இரண்டாம் மகன் – ஆதி.4:2
3. கர்த்தர் ஆபேலின் காணிக்கையை அங்கிகரித்தார் – ஆதி.4:4
4. இவனை காயீன் கொலைசெய்தான் – ஆதி.4:8
5. இயேசுவானவர் ஆபேலை நீதிமான் என்றார் – மத்.23:35
6. இவன் விசுவாசத்தினாலே காயீனுடையடைய பலியிலும் மேன்மையான பலியைச் செலுத்தினான் – எபி.11:4
7. இவனுடைய காணிக்கையைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார் – எபி.11:4

சிறுவர் பகுதி

## விசுவாசமான கப்பலை சேதப்படுத்தியவர்கள்

*வேத பகுதி:1தீமோத்தேயு 1:19,20*




சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்தியதாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். சபையானது விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாட்கள் வருஷிக்கப்பண்ணியபோது ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது. கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்கிறார் பவுல், அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். சில சமயங்களில் நாம் சொன்னபடி கேட்காவிட்டால் அப்பா, அம்மா இப்படி சொல்லுவாங்க, அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று, இல்லையா? ஆமாம் நாம் விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது, அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம் உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

**மனப்பாட வசனம்:**

“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்”-1பேதுரு5:8

## நடப்புச்செய்திகள்

❐ கரோனா தொற்றிலிருந்து தற்காத்துக்கொள்ள நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்ய முலிகை தயாரிப்புகளை ஊக்குவிக்கவேண்டும் என்று மாநில அரசுகளை ஆயுஷ் அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது

❐ வளைகுடா நாடுகளில் இருந்து லட்சக்கணக்கான கேரள மக்கள் இந்தியா திரும்புகின்றனர்.

❐ உலகில் ராணுவத்திற்கு அதிகம் செலவிடும் நாடுகளில், இந்தியா, முதன் முறையாக மூன்றாவது இடத்திற்கு முன்னேறி உள்ளது.





# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 20 ஜுன் -2020 கனி - 7


ஆசிரியருரை

## இரட்சிப்பின் வசனம்
## The Word of Salvation




இந்த இரட்சிப்பின் வசனம் முதலாவது இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டது. இயேசு பன்னிருவரையும் அனுப்புகையில்; "அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்; நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" என்றார் (மத்.10:5,6). முதலாவது தாம் தெரிந்துகொண்ட ஜனத்தை இரட்சிக்கும்படியாக தேவன் தீர்மானித்திருந்த திட்டத்தின்படியே இயேசுவை அனுப்பினார். தேவன் ஆபிரகாமுக்கு செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். அவன் மூலமாக தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியை ஆசீர்வதிக்க சித்தமானார். வாக்குதத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ! ஆகையால், ஆண்டவர் இயேசு கானானிய ஸ்திரீயினிடத்தில் பேசும்போது; "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படியல்லவென்றார்" (மத்.15:24). எனவே தம்முடைய சீஷர்களை ஆண்டவர் இயேசு அனுப்பும்போது அவர்களை இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பினார். இந்த இரட்சிப்பின் வசனத்தை சீஷர்கள் இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு எடுத்துச்சென்றார்கள். சிலர் ஏற்றுக்கொண்டார்கள் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளாதவர்களுடைய வீடுகளில் உங்களுடைய தூசியை உதறிப்போடுங்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன் என்றார். அந்தப்படியாக சீஷர்கள் முதலாவது இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

பேதுரு பேசும்போது; "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்" என்றார்

(அப்.2:22,23). இரட்சிப்பின் வசனத்தை கொண்டுவந்த இயேசுவை அந்த யூதஜனங்கள் ஏற்றுக்கொள்ளாமல் அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தார்கள். எத்தனையோ முறை அவர்களை சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தார். அவர்களோ அவரைப் புறம்பாக்கிப்போட்டார்கள். மேலும், பேதுருவும் யோவானும்; "அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் எனறான்" (அப்.3:26). அவர்களோ அதை அறியாது இயேசுவை சிலுவையில் ஆணியடித்துக்கொலைசெய்யும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களை ஆசீர்வதிக்கும்படி அனுப்பின தேவனுடைய குமாரனை குற்றவாளியாக்கினார்கள்.

மேலும், "அவர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதினாலும், இயேசுவை முன்னிட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினாலும், சினங்கொண்டு, அவர்களைப் பிடித்து, சாயங்காலமாயிருந்தபடியினால், மறுநாள் வரைக்கும் காவலில் வைத்தார்கள்" (அப்.4:2,3). உயிர்த்தெழுதலை விசுவாசிக்கும் கூட்டமும் அதை விசுவாசிக்காத கூட்டமும் இருந்தது. ஆகையால் இந்த உபதேசத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் அவர்களுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். மேலும், அவர்கள் உபதேசிக்கக்கூடாது என்று சொல்லி அவர்களை காவலில் வைத்தார்கள். ஆனால் வசனத்தைக்கேட்டு விசுவாசித்தவர்களின் தொகை ஐயாயிரமாயிருந்தது எனக்காண்கிறோம். இயேசுவின் நிமித்தமாக அப்போஸ்தலர்கள் பலபாடுகளை அனுபவித்தார்கள். மேலும், அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்.

பவுல் ஒருமுறை பேசும்போது; "யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப்பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள்" (அப்.13:45). தேவன் இஸ்ரவேலிலே இரக்கங்கொண்டு அவர்களை இரட்சிக்கும்படியாக அநேகரை அனுப்பிக்கொண்டிருந்தும் அவர்களோ செவிட்டு விரியனைப்போல கேளாதவர்களாயிருந்தனர். ஆகையால் பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: "முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத்தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" என்றார்கள் (அப்.13:46). இப்படியாக புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் கொண்டுசெல்லப்பட்டது. மேலும், "யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்" (அப்.13:50). ஏற்றுக்கொள்ளாதவர் களுடைய வீட்டிலும் பட்டணத்தின் எல்லைகளிலும் தூஷியை உதறிப்போடுங்கள் என்று சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே பின்பு அவர்கள் புறஜாதியார் நாடுகளில் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படியாக சென்றார்கள். புறஜாதி மக்கள்



**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்
ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 21**

**21. தேவன் ஒருவனை சோதிக்கிறாரா?**

1. சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக ☐ வசன ஆதாரம் ---------------------------
2. சோதனைகள் எல்லாம் தேவனாலே வருகிறது ☐ வசன ஆதாரம் ---------------------------------------------------------------------
3. உங்கள் திராணிக்குமேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடுப்பதில்லை ☐ வசன ஆதாரம் --------------------------
4. அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்வதில்லை ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------
5. சோதனைகளில் அகப்படும்போது அது உங்களில் பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------
6. சோதனைகள் நம்முடைய இச்சையினால் வருகிறதில்லை ☐ வசன ஆதாரம்----------------------------------------------------------------
7. தேவன் பரீட்சித்த பின்பு நாம் பொன்னாக விளங்குவோமா ☐ வசன ஆதாரம்------------------------------------------------------
8. தேவன் ஆபிரகாமை பரீட்சிக்கவில்லை ☐ வசன ஆதாரம் ---------
9. சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் ☐ வசன ஆதாரம்- ---------------------------------------------------------------------
10. தேவன் எல்லோருக்கும் ஜீவ கிரீடத்தை வாக்குபண்ணியிருக்கிறார் ☐ வசன ஆதாரம் ------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
Contact Us: 94435 58041

மேலும் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (வச.4) கிறிஸ்தவ மார்க்கம் என்பது பிறர் நலம் கருதும் மார்க்கமாகும். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எல்லாரையும் இரட்சிக்கும்படிக்கு மீட்கும் பொருளாகத் தம்மை தாமே ஒப்புக்கொடுத்தார். அவர் இவ்வுலகத்திற்கு மாம்சத்தில் வந்தபோது தன்க்காகவும் தம்மைப் பெற்றெடுத்த இவ்வுலக பெற்றோருக்காகவும், அந்தப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளாகிய சகோதர சகோதரிகளுக்காகவும் மட்டும் வாழ்ந்ததாகவோ, ஜெபித்ததாக வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. எனவே தான் நாமும் அவரைப் போல பிறருக்கானவைகளையும் நோக்க வேண்டும்.

கிறிஸ்துவானவர் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரியவர் அல்ல. உலகத்தின் அத்தனை ஜீவஜந்துக்களுக்கும் அனைத்து மொழி, நிறம், மதம், தேசம் சார்ந்த ஜனங்களுக்கும் ஒரே வழியானவர், மீட்பருமானவர். பிதாவினால் வானத்தின் கீழே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கொடுக்கப்படவில்லை. இதையெல்லாம் தெரிந்த, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், தனக்காகவே வாழாமல், தனக்காகவே ஜெபிக்காமல் எல்லா மனுஷருக்காகவும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் பண்ணவேண்டும். இதுவே நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக நன்மையும் பிரியமுமாயிருக்கிறது (1தீமோ.2:3) இவ்வாறு செய்வோமா?

கொரோனா போன்ற கொள்ளை நோயினால் சாவதைக் காட்டிலும் இயேசுவை அறிந்து கொள்ளாமல் சாவதே பெரியஇழப்பும், நித்திய இழப்புமாகும். சிந்திப்போம்! ஜெபிப்போம்!! நமக்காக வேண்டுதல் செய்கிறவர் தாமே நமக்கு உதவிசெய்வாராக!!! ஆமென்.

## சந்தா செலுத்திவிட்டீர்களா?



**The Word of Christ**
**Canara Bank A/c No.0946201000552**
**IFSC:CNRB0000946**

**India Post Payments Bank**
**ARJUNAN**
**048410018536**
**IPOS0000001**

### தெரிந்துகொள்ளுவோம்

*-K.R.K.Ravi Asir*

- மனிதன் முதன் முதலில் பயன் படுத்திய உலோகம் தாமிரம் ஆகும்.
- உலகிலேயே அதிகம் பயன்படுத்தப்படும் உலோகம் அலுமினியம். இது தண்ணீரில் மிதக்கக்கூடியது. ஒரு காலத்தில் இதன்விலை தங்கத்தின் விலையைவிட கூடுதலாக இருந்ததாம். அதனால் மன்னன் நெப்போலியன் தான் உபயோகிக்கும் அத்தனை பாத்திரங்களையும் அலுமினியத்தில் செய்து வைத்திருந்ததாக கூறப்படுகிறது.
- 'உலோகங்களின் அரசன்' எனப்படுவது தங்கம். 'உலோகங்களின் அரசி' எனப்படுவது வெள்ளி.
- 'கதிர்வீச்சு மூலகங்களின் அரசன்' என அழைக்கப்படுவது ரேடியம் ஆகும். இது உயிர்காக்கும் உலோகம் என்றும் கூறப்படுகிறது.
- எத்தனை ஆண்டு காலம் பூமியில் புதைந்து இருந்தாலும் தங்கத்தின் தன்மை மாறாதிருக்கும்.



கர்த்தருடைய வசனத்தை ஆவலோடு கேட்டு இரட்சிப்பின் வசனத்திற்குச் செவிகொடுத்தார்கள். அநேக குடும்பங்கள் மனந்திரும்பி, குடும்பம் குடும்பமாக சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து திருமுழுக்கு பெற்று கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

இரட்சிப்பின் வசனம் புறஜாதிகளுக்கும் கொடுக்கப்பட்டது. கர்த்தருடைய பிரதான கட்டளையில் நாம் படிக்கிறோம். "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்றார் (மாற்.16:15). முதலாவது இரஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்ட இரட்சிப்பின் வசனம் பின்பு கர்த்தரால் உலகமெங்கும் சொல்லும்படியாக கட்டளையிடப்பட்டது. அந்தப்படியாக அப்போஸ்தலர்களால் உலகமெங்கும் சுவிசேஷம் எடுத்துச்செல்லப்பட்டது. எடுத்துக்காட்டாக தோமா என்று சொல்லக்கூடிய ஒருவர் இயேசுவின் சீடர்களில் ஒருவராயிருந்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் இந்தியாவின் பல பகுதிகளுக்கு வந்திருக்கிறார். குறிப்பாக தமிழகத்தில் செயின் தாமஸ் மவுண்ட் என்று சொல்லக்கூடிய இடத்திற்கு வந்து சுவிசேஷம் அறிவித்துள்ளார் என்பதற்கான சான்றுகள் இருக்கிறதை நாம் அறிகிறோம். இப்படியாக புறஜாதி நாடுகளுக்கும் கர்த்தருடைய வசனம் இரட்சிப்பின் வசனம் எடுத்துச்செல்லப்பட்டதை அறிகிறோம். அப்போஸ்தலர்கள் சொல்லும்போது; "நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்" (அப்.13;47). அப்போஸ்தலர்கள் தங்களுடைய விருப்பத்தின்படி செய்யவில்லை. கர்த்தருடைய கட்டளையின்படியே உலக நாடுகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்று பிரகடனப்படுத்தினார்கள்.

புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறதை புறஜாதியார் கேட்டு, சந்தோஷமாக அதை ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிந்தனர். "புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்" எனக் காண்கிறோம் (அப்.13:48). எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஆனால் நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமே அதை விசுவாசித்து பற்றிக்கொண்டார்கள் என காண்கிறோம். மற்றவர்கள் மதக்கண்ணோட்டத்தில் அதை பார்த்திருக்கக்கூடும், சிலர் உறவைப்பார்த் திருக்கக்கூடும், இப்படி அநேகர் அதை ஏற்றுக்கொள்ள தயங்கியிருப்பார்கள். இதையெல்லாம் மீறி அப்போஸ்தலர்களால் சொல்லப்பட்ட வசனத்தை ஏற்று கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

பேதுரு புறஜாதியினிடத்தில் அனுப்பப்பட்டான். அதற்கு முன்பாகவே அவன் தரிசனத்தில் உணர்த்தப்பட்டான். வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்" இப்படி தான் கண்ட

தரிசனத்தைக்குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில் இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக் கொண்டு வாசற்படியிலே வந்து நின்றார்கள். அப்பொழுது ஆவியானவர் இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து இறங்கி, ஒன்றுக்குஞ்சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்றார். "மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன்உறவின்முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காக காத்திருந்தான்" (அப்.10:24). இப்படியாக புறஜாதிகளிலிருந்து அவன் கர்த்தரை விசுவாசித்து பற்றிக்கொண்டு குடும்பத்துடன் கர்த்தருடைய சபையில் இணைக்கப்பட்டான். கவனித்தீர்களா, அவன் தன்னுடைய உறவினர்கள் மற்றும் விசேஷித்த சிநேகிதர்கள் அனைவரையும் அழைத்து பேதுருவின் பிரசங்கத்தை கேட்கவைத்தான்.

இன்றைக்கு நான் மட்டும் இரட்சிக்கப்பட்டு விட்டால் போதாது என் குடும்பமும் இரட்சிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வேண்டும். மேலும் பேதுரு சொல்லுகிறார்; "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்றான்" (அப்.10:35). நீங்கள் தேவனுக்கு உகந்தவர்களாக மாற விருப்பமா? இன்றே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் அங்கமாகுங்கள். ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட்டால் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டு. இன்றே பாவ உலகில் பரிசுத்த இரட்சிப்பின் வசனத்திற்கு செவிகொடுத்து கீழ்ப்படியுங்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, கிறிஸ்துவின் வசனத்திற்கும் எனக்கும் என்ன? என்று நினையாதே அவர் யூதகோத்திரத்தில் தோன்றினாலும் புறஜாதிகளாகிய நமக்கும் இரட்சிப்பின் வசனத்தை அனுப்பிஇருக்கிறார். அவ்வசனத்தை ஏற்று அதற்கு கீழ்ப்படியும்போது எல்லையில்லா சந்தோஷத்தையும் சமாதானத்தையும் இப்பூமியில் நீ பெற்று நித்தியமான சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பாய். ஆகையால் காலம் தாழ்த்தாமல் இன்றே அதற்கு உன்னை ஒப்புக்கொடு.

**யூதேயாவில் உள்ள எருசலேம் சபையார் புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதை குறித்து சந்தோஷம் அடைந்தார்களா?**

ஆம், சுவிசேஷம் உலகமெங்கும் எடுத்துச்செல்லப்படவேண்டும் என்பது நம்முடைய ஆண்டவரின் கட்டளை. இதை சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள். இதில் பேதுருவினால் அநேகர் குணமாக்கப்பட்டதை யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும் கேள்விப்பட்டபோது; விருத்தசேதனமுள்ளவர்கள் அவனை நோக்கி: விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய் அவர்களோடே போஜனம் பண்ணினீர் என்று வாக்குவாதம் பண்ணினார்கள். அவன் விவரித்துச் சொன்னதை அவர்கள் கேட்டபொழுது; "அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (அப்.11:18). இந்த சந்தோஷத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும்படியாக உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.




பெண்கள் பகுதி

## நமக்காக வேண்டுதல் செய்கிற ஒருவர் உண்டு

There is an Intercesser for us

*-Glory Arjunan*



இயேசு கிறிஸ்து பிதாவை நோக்கி ஏறெடுத்த ஜெபத்தைக் குறித்து யோவான் 17ம் அதிகாரத்தில் வாசிக்கலாம். "பிதாவே,...நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களா யிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர் அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக் கிறார்கள்....... நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்; ...நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; ... நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று ஜெபித்தார் (யோவா.17:5-15). இவ்வசனங்களில் "நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்" என்கிறார். நம்மை மீட்கும் பொருளாகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு நம்முடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றவர்களாக இருப்போமென்றால் நாம் கிறிஸ்துவுக்குரியவர்களாகவும் இருப்போம். அப்படியிருக்கும்போது நமக்காக அவர் வேண்டிக்கொள்வார் அல்லவா? இது மாத்திரம் அல்ல வசனம் 20ல் "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றார். அவருடைய சீஷர்களுக்கும் சீஷர்கள் மூலமாக தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர் களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார். இப்படி நமக்காக வேண்டுதல் செய்ய இயேசுவானவரும், பரிசுத்த ஆவியானவரும் இருக்கும் போது நாம் ஏன் மற்றவர்களை நோக்கிச் செல்லவேண்டும். இன்னும் பால் குடிக்கிற குழந்தைகளைப்போல் இல்லாமல் விசுவாசித்து சந்தோஷத்துடனும் சமாதானத்துடனும் வாழுவோம். அவர் சகலத்தையும் நன்மையாக முடிசூட்டுவார்.


தேவன் கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நமக்குக் கொடுத்திருக்கிற பொறுப்புகள் அதிகம். இன்று உலகெங்கும் நிமிடத்திற்கு நிமிடம் ஜீவனுள்ள தேவனையும் கிறிஸ்துவின் மீட்பையும் பெற்றுக்கொள்ளாமலும் அறியாமலும் மரித்துக்கொண்டிருக்கிற ஜனங்களைக் குறித்து ஒரு நிமிடம் சிந்திப்போம். அவர்கள் படும் வேதனையை அறிவோமானால் நமக்காக அல்ல, அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவோம். 1தீமோ.2:1ம் வசனம், "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் பண்ணவேண்டும்" என்று சொல்லுகிறது. ஏனென்றால் "நாம் எல்லாபக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும் நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது" (1தீமோ.2:2-3) என்றெழுதப்பட்டுள்ளது.

“உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா?..... கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்” (1கொரி.6:15,17).

எனவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனிதவர்க்கத்திற்காக தொடர்ந்து மத்தியஸ்தராய் கிரியை நடப்பிக்கும்படிக்கு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். 1தீமோத்தேயு2:5-ன்படி, **கிறிஸ்து இயேசு மனுஷனாக** தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் தேவனுடைய குமாரனாகவும், மனுஷகுமாரனாகவும்: உயிர்த்தெழுந்து, மறுரூபமாக்கப்பட்ட நமது இரட்சகராகவும் இருக்கிறார். நாமனைவரும் ஆவிக்குரியபிரகாரமாக அவருக்குள் “திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக மாறியிருக்கிறோம்”.

## *கொரோனா கால சிந்தனைக்கு...*

உங்களுக்குத் தெரியுமா?



1. பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல் நியாயத்தீர்ப்புக் வைத்திருக்கிறார் - 2பேது.2:4
2. பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நோவா முதலான எட்டுப்பேரை காப்பாற்றி அவபக்தியுள்ளவர்களை ஜலப்பிரளயத்தினால் அழித்தார் - 2பேது.2:5
3. சோதோம் கொமோரா பட்டணங்களை சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாக தீர்த்து பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு திருஷ்டாந்தமாக வைத்தார் - 2பேது.2:6
4. கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் - 2பேது.2:9
5. இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இறையாக வைக்கப்பட்டு தேவபக்தியில்லாதவர்கள் நியாந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது - 2பேது.3:7
6. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது... தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது - 1பேது.3:12
7. பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால்... பயத்துடனே நடந்துகொள்ளுங்கள் - 1பேது.1:17
8. அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும் அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும் - 1பேது.1:7
9. அவர் (இயேசு) உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார் - 1பேது.1:20
10. இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்! - 2பேது.3:11
11. தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் - 2பேது.3:12
12. இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் - 2பேது.3:14





# பழைய பாவ மனிதன் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

## பாடம் - 9 தற்கொலை - Suicide

*-J.C.Choate*

உங்களுக்கு நன்றியையும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு வேதாகம வகுப்பிற்கு நான் மீண்டும் வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் அறிந்துள்ளபடி, பழைய பாவ மனிதனை களைந்து போட்டு கிறிஸ்து இயேசுவுக்குள்ளான நீதிக்குரிய புதிய மனிதனை அணிந்து கொள்ளுவதின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கு உதவியாக இதுவரை சில பாடங்களைப் படித்திருக்கிறோம். இதற்கு ஒப்புமையாக இருளான அறையை விட்டு வெளிச்சம் நிறைந்த அறைக்குள் வருவது போலவும், அல்லது அவிசுவாசியாக இருந்த நிலையை விட்டு பிறகு கிறிஸ்துவுக்குள் விசுவாசியாக மாறியிருப்பதாகும்.

நாம் இந்தப் பாடங்களை தொடர்ந்து படிக்க இப்போது தற்கொலை பற்றி படிக்கப் போகின்றோம். தற்கொலை சாதாரணமாக தற்கொலை அல்லது எங்கே ஒருவன் தன்னை தானே கொலை செய்துகொள்ளுவதாகும். தேவனுக்கு விரோதமான ஒரு பாவம், மேலும் தனக்கும், தன் குடும்பத்திற்கும் விரோதமான ஒரு பாவம் மற்றும் இது பல நாடுகளில் சட்டங்களுக்கு எதிரான ஒரு பாவமாகும்.

தற்கொலை என்பது ஒரு புதிய காரியமல்ல. இது ஆரம்ப காலத்திலிருந்தே நடைபெற்றுக் கொண்டிருந்தது, பழைய ஏற்பாட்டுக் காலத்திற்குத் திரும்பிச் சென்று எப்படி இஸ்ரவேலின் முதல் அரசனான சவுல் தற்கொலை செய்துகொண்டான் என்பதை நினைத்துப் பார்ப்போம். இவன் தேவனுடைய ஜனங்களை ஆளும்படிக்கு தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன், ஆனால் தன் வாழ்நாட்களை எதிரிகளுடன் போர்களில் சண்டையிடுகிறவனாகக் கழித்தான். 1சாமுவேல் 31:1-6, வாசிப்போம்; "பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள்; இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூகாவையும் வெட்டிப்போட்டார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக் கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு, தன் ஆயததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான். சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது, அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து, அவனோடே கூடச் செத்துப்போனான். அப்படியே அன்றையதினம் சவுலும், அவன் மூன்று குமாரரும், அவன் ஆயுததாரியும், அவனுடைய எல்லா மனுஷரும் ஒருமிக்கச் செத்துப்போனார்கள்".

இன்னொரு புகழ்பெற்ற எடுத்துக்காட்டு யூதாஸ் ஸ்காரியோத்தின் தற்கொலை ஆகும். யூதாஸ் கிறிஸ்துவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாயிருந்தான். அவன் கர்த்தரோடே நடந்தான், அவருடைய போதனைகளைக் கேட்டான். அவருடைய அற்புதங்களைக் கண்டான் ஆனால் முடிவில் தன்னுடைய தலைவரையே முப்பது வெள்ளிக்காசுக்காகக் காட்டிக் கொடுத்தான். அவன் ஏன் இதைச் செய்தான் என யார் அறிவார்? இவை பல முறை முன்னறிவிக்கப்பட்டவைகள். ஒருவேளை ரோம அரசாங்கத்திற்கு எதிராக செயல்படும்படி கிறிஸ்துவை வற்புறுத்த முயற்சித்து

கொண்டிருக்கலாம், ஆனால் நாம் அதை அறியோம். அவனுக்குப் பணம் தேவைப்பட்டிருந்தால் நிச்சயமாக முப்பது வெள்ளிக்காசு மிக அதிகமான தொகையல்ல. "அப்பொழுது, அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக்கொண்டுவந்து; குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான். பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்து இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப்போடலாகாதென்று சொல்லி, ஆலோசனைபண்ணினபின்பு, அந்நியரை அடக்கம்பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தை அதினாலே கொண்டார்கள். இதினிமித்தம் அந்த நிலம் இந்நாள்வரைக்கும் இரத்தநிலம் என்னப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று" (மத்.27:3-10) என வாசிக்கிறோம். பின்பு அப்போஸ்தலர் 1-ல் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் கூடி யூதாஸுக்குப் பதிலாக இன்னொருவனைத் தெரிந்து கொள்ளுகையில், பேதுரு, "சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்குபெற்றவனாயிருந்தான். அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது. சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது" என்று விளக்கினார்.

ஆனால் ஏன் இந்த மனிதர்கள், மற்றவர்கள் தற்கொலை செய்து கொண்டனர்? அது மாத்திரமல்ல, ஆனால் இன்று ஏன் ஜனங்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர்? மேலும் நம் சொந்த நாட்களில் அநேகர் இவ்விதமான துக்ககரமான செயலை செய்கிறார்கள் என நான் அதிகப்படியாகக் கூற கூடும். அவர்களில் அதிக சதவீதத்தினர் இளைஞர்கள். ஆனால் ஏன்?

நிச்சயமாக தற்கொலைக்கு பல காரணங்கள் உள்ளன. ஆனால் ஒன்று கூட நியாயமானவையல்ல. எடுத்துக் காட்டாக, தற்கொலை செய்து கொள்ளுகிறவர்கள் பயத்தினால் செய்து கொள்கிறார்கள். சவுல் தன் எதிரி தன்னைப் பிடித்துவிடுவான், தன்னை துன்புறுத்துவான், தன்னை தகாதவிதமாக நடத்துவான் என்று பயந்தான். இதையெல்லாம் பார்க்கையில், இதிலிருந்து தப்ப மரணம் ஒன்றே வழியாகயிருந்தது. அதைப்போலவே யூதாஸும் தான் நினைத்தப்படி காரியங்களும் ஒன்றும் ரோம அரசாங்கத்தால் நடைபெறவில்லை என அவன் கண்டபோது வெளிப்படையாகவே தான் எதைச் செய்தானோ அதற்காக வருந்தினான். அவன் தானே தன்மேல் அவமானத்தைக் கொண்டுவந்ததைக்குறித்தும் தனக்கு எதிர்காலத்தில் என்ன நம்பிக்கை உள்ளது என்றும் நினைத்து பயந்தான். தெளிவாக சிந்தித்துப்பார்க்காமலிருந்திருக்கலாம், பின்பு அவன் வெளியே சென்று தன்னை தானே தூக்கிலிட்டுக் கொண்டான். அப்போஸ்தர் 16-ல் பவுலும் சீலாவும் சிறைச் சாலையிலிருந்து கொண்டு அதன்பின் அவர்கள் அற்புதமாக விடுவிக்கப்பட்டார்கள் என வாசிக்கிறோம். சிறைச்சாலைக்காரன் வந்து பார்த்தபோது



குமாரனாகவும் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் பிறந்திருக்கிறவர்களுக்கு சகோதரராகவும் நிலைத்திருக்கிறார். அவரோடுள்ள சகோதரத்துவத்தின் மூலமே நாம் தேவனுடைய குமாரர்களாக அழைக்கப்படக் கூடியவர்களாயிருக்கிறோம்.

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; **தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே;** கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோம.8:16,17). யோவான்1:1-14-ன்படி ஆதியிலிருந்தே, வார்த்தை தேவனோடிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது, இந்தக்கூற்று தேவத்துவத்தில் சமத்துவத்தைக் காட்டுகின்றது. மேலும் அந்த வார்த்தை தம்மை வெறுமையாக்கி (பிலி.2:7), மனுஷ சாயலாகி, தேவனுடைய குமாரனாகத் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவராய் தம்மைத் தாமே தாழ்த்தி, தேவனுடைய முதற்பேறானவராகி தேவனுடைய சுதந்தரரானார். இதைப்போல தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறப்பதன் மூலம் நாம் கிறிஸ்துவினுடைய சகோதரரும், சகோதரிகளுமாக மாறும்போது, நாம் தேவனுடைய ஜனங்களும் கிறிஸ்துவுடனேகூட சுதந்தரருமாக இணைக்கப்படுகிறோம்.

"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதனிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; .....ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.....அன்றியும், **அவர்** ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கும் எவ்விதத்திலும் **தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது**" (எபி.2:11,14,15,17).

"......**கிறிஸ்துவோ** அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான **குமாரனாக** உண்மையுள்ளவராயிருக்கிறார்; ...நாமே அவருடைய வீடாயிருப்போம் ......கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்"(எபி.3:6-14). கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனுஷசாயலானது போல, அவருடைய சகோதரரும் கிறிஸ்துவினுடைய சகல பரிபூரணத்தினால் நிறையப்படும்போது அவர்களும் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறுவார்கள்!

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, **திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு**, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேதுரு1:3,4).

"**நீங்கள்** அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், **தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்...**" (எபே.3:19). தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களை ".....தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்" (ரோம.8:29).

பெண்கள் பகுதி



# இயேசு கிறிஸ்து நித்திய பலி

## Jesus Christ the Eternal Sacrifice -Betty

நம்முடைய சரீரப்பிரகாரமான பிறப்பில் நாம் விரும்புகின்ற ஒரு குடும்பத்தில் பிறக்க அந்தக் குடும்பத்தைத் தெரிவு செய்ய இயலாது. நாம் நம்முடைய பிறப்பிற்குப்பின் வெளிப்படையாக நாம் பிறந்த அந்த குடும்பத்தின் அங்கமாக இருந்து கொண்டிருக்கிறோம்.

ஆவிக்குரிய பிரகாரமாக, நாம் எந்தக்குடும்பத்தின் அதாவது தேவனுடைய அல்லது சாத்தானுடைய குடும்பத்தின் அங்கமாக இருப்போம் என்பதைத் தெரிவு செய்து கொள்கிறோம். வெறுமனே தெரிந்துகொள்வதினால், தேவனுடைய பிள்ளையாக நம்மை மாற்றிக்கொள்ளுகிறதில்லை. அவருடைய குடும்பத்திற்குள் பிறக்க நாம் தண்ணீரின் பிறப்பு மற்றும் ஆவியின் பிறப்பாகிய ஞானஸ்நானம் என்ற பிறப்பிற்கான வழிமுறையின் வழியாகச் செல்லவேண்டும்.

1பேதுரு1:22,23 மற்றும் 2:1:2 இந்த ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி மேலும் தெளிவுப்படுத்துகிறது: "…..ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே…… அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே… இப்படியிருக்க…..நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்".

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை (கிறிஸ்துவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால் பிறந்தவர்கள்" (யோவா.1:12,13).

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே…நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்களே….. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலா.3:26,27;4:6,7).

**கிறிஸ்துவின் சகோதரத்துவத் தொடர்ச்சி**

வேதவாக்கியங்களில் கிறிஸ்து பரத்திற்கு எழுந்தருளின பிறகு, கிறிஸ்துவோடுகூட நம்முடைய சகோதரத்துவத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான நம்முடைய உறவினை ஏற்படுத்தி தேவனுக்கும் கிறிஸ்துவுக்குமிடையேயுள்ள முடிவில்லா பிதா-குமாரன் உறவினை பல குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன:

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகவும் மனுஷகுமாரனாகவும் மாம்சத்திலே பிறந்தார். அவர் வானத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட இரட்சகராக, தேவனுடைய



அவர்கள் ஓடிப்போனார்கள் என எண்ணி தன் பட்டயத்தை உருவித்தன்னைக் கொலை செய்து கொள்ளப்போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு; "நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்" (அப்.16:28). சிறைச்சாலைக்காரன் அவர்களைக் காக்கும் பொறுப்புடையவனாகவும் அவர்களைக் காவல் காக்கிறதோடேகூட தன் ஜீவனைக் காப்பவனாகவுமிருந்தான் அவர் தப்பித்துவிட்டார்களென்றால் அவன் தூக்கிலிடப்படுவான் என அவன் அறிவான். அவன் அவமதிக்கப்படுவதையும் தாழ்த்தப்படுவதையும் காட்டிலும் தன் சொந்த ஜீவனை விட்டுவிடுவதே நல்லது என்று பயந்தான் நிச்சயமாக அவன் வழக்கத்திற்கு மறான ஆபூர்வமான கைதிகளைக் காக்க வேண்டியவனாயிருந்தான். அவர்கள் சிறைச்சாலைக்காரன் தற்கொலை செய்வதை விரும்பவில்லை, ஆனால் அவர்கள் அவன் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டுமென விரும்பினார்கள். ஆனபடியினால் அவர்கள் அவனுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் போதித்தார்கள், அதன் விளைவு அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்களாக மாறினார்கள். இந்த சம்பவம் ஒரு நல்ல முடிவினை அடைந்தது என்பது ஒரு நேரம்.

ஆனால் மற்றவர்கள் தங்களுடைய தேர்வுகளில் தோல்வியடையும் பயத்தில் தற்கொலை செய்து கொள்ளுகின்றனர், இளைஞர்கள் அடிக்கடி இந்த அனுபவத்திற்குள்ளாகின்றனர். அவர்கள் அதை சமாளிக்கமுடியாது என்று அதிகமான மன அழுத்தத்தை தங்கள் மேல் சுமத்திக்கொண்டு இவ்வாறு செய்கின்றனர். பிறகு அவர்கள் புற்று நோய் உடையவர்களாக அல்லது வேறு ஏதாவது வியாதிகொண்டு அல்லது நோய்கள் மற்றும் எல்லாவிமான வேதனை மேலும் பொறுக்க முடியாத மரணவேதனையையும் தங்கள் மேலும் தங்கள் குடும்பங்களின் மேலும் சுமத்திக் கொண்டிருப்பதினால் அவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

மற்றவர்கள் மனஉளைச்சலினால் தற்கொலை செய்து கொள்ளுகின்றனர். சட்டவிரோதமான குற்றத்தை செய்து பிடிப்பட்டவர்களும், சோதனையினால் வரும் அவமானத்தை சந்திக்க இயலாதவர்களானாலும் மற்றும் சிறைக்குள் அனுப்பப்பட்டவர் களானாலும் அவர்கள் தங்களை தாங்களே கொலை செய்துகொள்கின்றனர். பலர் மற்றவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு தங்களுடைய ஜீவனை விட்டுவிடுகின்றனர், அவர்கள் தன்னுடைய தகப்பன் அல்லது தாய் அல்லது யாரோ ஒருவராக தன்னை நேசிக்கிறவர்களாக இருக்கலாம் ஆனால் அந்த மனிதனோ அவர்களை நேசிக்காமல் தன்னை மாய்த்துக் கொள்கிறான் மற்றவர்களிடம், அதிக பாரமான மனஅழுத்தத்தை அவர்கள் மேல் வைத்து, தாங்கள் பெற்ற அதிகமான கடன் தொகையை செலுத்தித் தீர்க்கும்படி வற்புறுத்தப்படுவதினாலும் இம்முடிவுக்குச் செல்கின்றனர். பிறகு மோசமாக நடத்தப்பட்ட பெண்கள் தங்களைத் தாங்களே தற்கொலை செய்துகொள்ளுகின்றனர். மற்றவர்கள் தங்ளை தீக்கொழுத்திக் கொள்கின்றனர் அல்லது ஏதாவது சிலவற்றினை எதிர்த்து வேறுவகைகளில் தங்களை மாய்த்துக் கொள்கின்றனர். அநேகர் மதசம்பந்தமான காரணங்களுக்காக தற்கொலை செய்துகொள்ளுகின்றனர்.

இப்படியே, இப்படியே இது தொடர்ந்து நடக்கிறது. ஆனால் நீங்கள் தற்கொலையைப் பார்த்து அதை ஒரு முடிவுக்கு கொண்டு வர முயற்சிக்கும் போது, ஏன் மக்கள் தற்கொலை செய்துகொள்ளுகின்றனர், அதிகமாக ஜனங்கள் காரியங்களை ஆழமாக ஆராய்ந்து பார்க்க நேரமில்லாதவர்களாக இவ்விதமாகச் செய்கின்றனர் என்பதை உற்று நோக்க தொடங்குவீர்கள். அவர்கள் மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர், மாபெரிய மன அழுத்தத்தை உடையவர்களாயிருப்பர், அச்சமயத்தில் மிகக் கஷ்டமான சூழ்நிலையை தங்களுக்குள் காண்பார்கள் எனவே இதைப்பற்றி நினைப்பதற்கு முன் ஒரு தீர்வுக்கு வரவேண்டும் அல்லது ஒரு நண்பனிடம் பேசிக்கொள்ளவேண்டும் அல்லது யாரோ ஒருவரிடம் பேசிக்கொள்ள வேண்டும் அதன்பின் தற்கொலை செய்யும் முயற்சியிலிருந்து விடுபட்டவர்களாய் அவர்கள் அதை மேற்கொள்வார்கள். நிச்சயமாக இது ஒரு வெளியேற்றமல்ல மேலும் இந்தக்காரியம் தவறு என்றும் அநேக ஜனங்களுக்கு

உதவிசெய்ய வெளிவரவேண்டும் என்றும் பல பதில்களோடு காண்பிக்க அதிகமாகக் கற்றுக்கொள்வது அவசியம்.

தற்கொலை செய்வது தவறு என்று ஆரம்பிப்பதோடு, இது ஒரு பாவம் என்பதும் உண்மை. வேதாகமம் "கொலை செய்யாதிருப்பாயாக" (ரோம.13:9) என்று தெளிவாக போதிக்கிறது. இதன் அர்த்தம் மற்றவர்களையும் கொலை செய்யக்கூடாது, அத்தோடுகூட நம்மை நாமேயும் கொலைசெய்யக்கூடாது என்பதாகும். ஒருவர் ஒருமுறை இந்தபாவத்தைச் செய்துவிட்டால் இயற்கையாகவே இதற்காக மனந்திரும்புதல் கிடையாது, அதாவது ஒருவன் இழந்தவனாகக் காணப்படுவான், அவன் கணக்குக் கொடுக்க வேண்டியவனாயிருக்கிறான். தற்கொலையினால் வஞ்சிக்கப்படுவது நியாயத்தீர்ப்பில் வந்து நிறுத்தப்படும் என்பதால் நாம் மிகக் கவனமாயிருக்கவேண்டியது ஒரு காரணமாயிருக்கிறது. ஒருவருடைய மனநிலைமை எப்படிப்பட்டது என்பது நமக்குத் தெரியாது, மேலும் ஆனபடியால் நாம் அந்த நபரை கண்டிப்பாக தேவனிடத்தில் விட்டுவிட வேண்டும். அந்த நபருக்கு உதவி செய்ய மிக தாமதமாகிவிட்டது ஆனால் அந்த நிகழ்வு மறுபடியும் நடைபெறாவண்ணமிருக்க நாம் உறுதியுடன் முயற்சி செய்ய முடியும், நம்மை சூழ்ந்திருக்கிறவர்களுக்கு இதைக் குறித்த அபாயத்தைப் பற்றி போதனை செய்வதன் மூலமும், அவர்களுடைய பிரச்சனைகளை சமாளிக்க அவர்களுக்கு பல வழிகளில் உதவிசெய்து அவர்கள் பல உதவிகளைப் பெற எங்கே செல்லவேண்டுமென அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் வாழ்வதற்கு ஒவ்வொன்றையும் பெற்றிருக்கிறான். அவன் ஜீவனையும், தன்னை போஷிக்கும்படிக்கு தன் கர்த்தரையும், வரப்போகிற நித்திய வாழ்வையும் பற்றிய நம்பிக்கையையும் கொண்டிருக்கிறான். அவன் தன்னுடைய உதவிக்கென்று தேவனை நோக்கிப் பார்க்கிறவனயிருக்கிறான், மற்றும் தேவனும் தான் அவனை ஒருபோதும் விட்டு விலகுவதுமில்லை அல்லது அவனைக் கைவிடுவதுமில்லை என்று வாக்களித்துள்ளார். மேலும் அவனுக்கு ஒவ்வொரு சோதனையையும் மேற்கொள்ள உதவுவதாகவும் தப்பித்துக் கொள்ளும் வழியையும் ஏற்படுத்தியுள்ளார். அவன் ஜெபிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றிருக்கிறான். ஆனபடியினால் அவன் தன்னுடைய பிரச்சனைகளைக் குறித்து கர்த்தரிடம் பேசவும் அத்தோடு கூட பிரச்சனைகளுக்குத் தீர்வுகள் காண தனக்கு உதவி செய்யும்படி அவரிடம் கேட்கவும் தகுதியுள்ளவனா யிருக்கிறான். இந்த காரியங்களைக் குறித்து அவரிடத்தில் பேசும்படிக்கு கர்த்தரிடத்திற்குச் செல்ல அனுமதிக்கும்படியான தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தை அவன் பெற்றிருக்கிறான். அவன் ஐக்கியத்திற்கென்று சகோதரர்களைக் கொண்டுள்ளான் அத்தோடு அந்த சகோதரர்களோடு இணைந்து ஐக்கியம் வைத்துக் கொள்ள முடிகிறது. அத்தோடுகூட கிறிஸ்தவர்களாக இருக்கையில், நாம் ஒவ்வொருவருடைய பாரங்களை சகிக்கக்கூடியவர்களாகவும், அதன் பொருள் நாம் ஒவ்வொருவரும் தேவையான நேரத்தில் உதவுபவர்களாக இருக்கக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

வேதவாக்கியத்தில் கூறப்பட்டுள்ளபடி நாம், தேவனும், கர்த்தரும், பரிசுத்த ஆவியும் வாசஞ்செய்கிற தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் (1கொரி.3:16,17; 1கொரி.6:16) இதைப்போல கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறோம். (ரோம.6:3,4; கலா.3:26,27). கர்த்தர் நாம் பெலமுள்ளவர்களாக இருக்கும்படிக்கும் தன்னடக்கம் கொண்டிருக்கவும் விசுவாசமுடையவர்களாயிருக்க வேண்டுமென நமக்குப் போதிக்கிறார் (எபி.11:6; எபே.6:10; 1பேது.5:7).

பிரச்சனைகள், மன அழுத்தங்கள் மற்றும் முக்கிய தேவைகளோடு கூடிய கஷ்டமான நேரங்களில் நம்மை வழிநடத்தி உதவி செய்யும்படிக்கு வேதாகமத்தில் பல விதமான போதனைகள் உள்ளன. இவைகளெல்லாம் நமக்கு பெலத்தையும் நம்முடைய ஜீவனையும் தொடர்ந்து மதிக்கும்படியும் வாழும் வாழ்வையும் ஒருபோதும் அதை விட்டுவிடாமலிருக்க ஊக்கத்தையும் கொடுக்கிறது. நாம் மரிக்கும் போது இயற்கையாக மரிப்பதையே விரும்பவேண்டும், மேலும் குறிப்பாக ஒருவர் தனக்குத் தானே செய்து கொண்டதாக இருக்கக் கூடாது.



பதவிகள் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்தால் சபை அங்கத்தினர் ஆவார்கள். மனிதர்கள் வழக்கமாக சபையாரின் மத்தியிலே தாழ்மையான ஊழியர்களாக இருக்க விரும்புகிறதில்லை. இதற்கு பதிலாக அநேகர் மிகவும் பெரிதான திறமை அல்லது பலத்தை அடையும்படி நாடுவார்கள். அவர்கள் தங்களுக்காக ஒரு பெரிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தும்படியாக தேவனுடைய திட்டத்தை கெடுத்துப்போடுவார்கள். மனித பெருமை சபை வழிநடதுதலை எளிதாக கெடுத்து விடுகிறது. ஆகையால் இந்த பாடம் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

**3. பிராந்திய சபைகள் வழக்கமாக அவைகளை வழிநடத்துகிறவர்களைப் போன்று நன்மையானதாக அல்லது தீமையானதாக இருக்கின்றன.**

அப்போஸ்தலானகிய பவுல் இதை புரிந்து கொண்டபடியால் எபேசுவிலிருந்து மூப்பர்களை வரவழைத்து அவர்களுடனே பேசினார் (அப்.20:17-30). பெரும்பாலான சபைகள் நல்ல வழிகாட்டுனர்களை பின்பற்றி பலமான சபைகளாக மாறுகின்றன அல்லது பலவீனமான அல்லது தீய வழிநடத்துனர்களை மோசமான சபைகளாகும்படி பின்பற்றுகின்றன. இந்த காரணத்தினாலேயே ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் நல்ல மூப்பர்கள் அல்லது கண்காணிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பது பரிசுத்தாவியானவரின் திட்டமாக இருக்கிறது (அப்.20:28). பலமான வழிநடத்துதல் ஒரு பலம் வாய்ந்த சபையை உருவாக்குகிறது.

ஆனால் நல்ல வழிநடத்துதல் பெரும் முயற்சியின்றி வருகிறதில்லை. இது அதிகமான போதனை மற்றும் பயிற்சியின் விளைவாக இருக்கிறது. தேவனுடைய ஜனங்களை வழி நடத்துகிறவர்கள் அவசியம் நன்கு ஆயத்தம் ஆனவர்களாகவும், நன்கு பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்களுடைய பணி பூமியிலே மிக முக்கியமான பணியாக இருக்கிறது.

பவுல் தீமோத்தேயுவுக்கு தன்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவிக்கும்படி கற்பித்தார் (2தீமோ.2:2). மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க மனுஷருக்கு போதிப்பதென்பது வழிநடதுதலைக் குறித்து தேவனுடைய திட்டமாக இருக்கிறது இந்த காரணங்களுக்காவே சபையின் அமைப்பை குறித்த வேதபோதனையான இந்த பாடம் மிகவும் அத்தியாவசியமானதாக இருக்கிறது.

**கேள்விகள்**

1. 1தீமோ.4:1 மூன்னுரைத்தது சிலர் ---------------- விட்டு ------------- என்று.
2. கலாத்.1:7 சொல்கிறது சிலர் ----------- வின்------------------------- என்று.
3. பவுல் -------------- க்கு ஆள் அனுப்பி ----------- வரவழைத்தான் என்பதை அப்.20:17.
4. அப்.20:28 அவர் அவர்களுக்கு ------------ குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்கிறது .
5. அப்.20:29 ------------ தப்பவிடாத ---------------------- உங்களுக்குள்ளே வரும் என்று சொல்கிறது .
6. சபைக்கு மேலாக போப் என்பவரை குறித்து வேதாகமம் குறிப்பிடுகிறதா? -----
7. மத்.20:20ல் -------- ------------ என்பவர்களின்தாய் இயேசுவினிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ணினாள்.
8. முந்தின காலங்களில் இருந்ததைப் போன்று மனுஷனுடைய பெருமை இன்று ஆபத்தானதாயிருக்கிறதா? -----------
9. போதிக்கப்பட்டவர்கள் மற்றவர்களுக்கு ------- வகையில் இருப்பார்கள் என்று 2தீமோ.2:2 வெளிப்படுத்துகிறது.
10. நல்ல வழிநடத்துனர்கள் ------------- சபைகளை உருவாக்குகிறர்கள்; மோசமான வழிநடத்துனர்கள் ----------- சபைகளை உருவாக்குகிறார்கள்.

முன்னுரைத்திருந்தது (1தீமோ.4:1). சிலர் மெய்யான சுவிசேஷத்தை மாற்றவும், புரட்டவும் செய்வார்கள் (கலா.1:6-9), அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபையின் மூப்பர்களை அவர்கள் கண்காணிகளாய் இருக்கிறபடியால் மந்தையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று எச்சரித்தார் (அப்.20:28). அவர் அவர்களிடம் மந்தையை (சபையை) போஷிக்கும்படி அல்லது போதிக்கும்படி சொன்னார், ஏனென்றால் கள்ளப்போதகர்கள் வருவார்கள். கள்ளப் போதகர்கள் எழும்பி, கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையை விட்டு புறம்பே வழிநடத்துவார்கள் (அப்.20:28-30). ஒரு சில வருடங்களிலேயே இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது என்பதை நாம் சபை வரலாற்றில் இருந்து அறிந்து கொள்கிறோம். மனிதர்கள் விசுவாசத்தை விட்டு வழிவிலகத் தொடங்கினார்கள். கள்ளப்போதகர்கள் தங்களை பின்பற்றியவர்களை புறம்பே வழி நடத்தத் தொடங்கினார்கள். சபையை வழி நடத்தியவர்கள் தேவன் ஒருபோதும் திட்டமிடாத வழிகளிலே ஆளுகை செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் ரோம கத்தோலிக்க சபை, இன்னும் பிற நாம கரண சபைகளின் வகையிலே அமைப்புகளை தொடங்கினார்கள். இவ்விதமாகவே சபையை வழிநடத்துதல் என்பது முதலாவதாக கேடுபாடானது.

மனுஷர் வேதாகமத்தை விட்டு விலகும் முதன்மையான வழிகளில் ஒன்றாக சபையின் அமைப்பு பற்றிய காரியத்தில் இருக்கிறது. மூப்பர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சபைகளை ஆளத் தொடங்கினார்கள். பின்னர் "பிஷப்கள்" மூப்பர்களை ஆளத் தொடங்கினார்கள். இறுதியாக ஒரு போப் தேர்ந்தெடுக்கப்படும் வரை மனிதர்கள் தொடர்ந்து சபை ஆளுகையின் வேதாகம திட்டத்தை மாற்றும்படி தொடர்ந்தார்கள். வேதாகமத்தில் போப் என்பவர் இல்லை, ஆனால் மனிதர்கள் விசுவாசத்தை விட்டு வழி விலகினார்கள். மனிதர்கள் சபையின் உண்மையான அமைப்பை கெடுத்து விடுவார்கள் என்பது எப்பொழுதுமே ஆபத்தான காரியமாயிருக்கிறது. எப்போதெல்லாம் சபையிலிருந்து விலகும் காரியங்கள் வந்தனவோ அப்பொழுதெல்லாம் அவைகள் வழக்கமாக வழிநடத்துதலில் இருந்துதான் ஆரம்பமாயின. இதன் காரணமாகவே சபையின் அமைப்பை குறித்து கற்றுக்கொள்வதென்பது மிகவும் அத்தியாவசியமான காரியமாக இருக்கிறது. மற்றவர்கள் சத்தியத்தை விட்டு எவ்வாறு வழி விலகினார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளும்போது, நாம் அந்த தவறுகளை தவிர்த்து விட முடியும்.

**2. மனித பெருமை எந்த வழி நடத்துதலையும் எளிதாக கெடுத்துவிடும்.**

பெருமை என்பது சுயமகிமையை விரும்புவதாக இருக்கிறது. எந்த ஒரு வழிநடத்துகிறவரக்கும் இது ஒரு பெரிய சோதனையாக இருக்கிறது. யாரோ ஒருவர் ஒரு பதவியில் இருக்கும் பொழுது அவர் ஒரு மேலான பதவியை விரும்புகிறார். ஒரு தலைவர் ஏதோ கொஞ்சம் அதிகாரம் உடையவராய் இருக்கும் பொழுது அவர் இன்னும் கூடுதலான அதிகாரத்தை விரும்புகிறார். இதன் காரணமாகவே சபையில் வழிநடத்துதல் என்பது மிகவும் எளிதாக கேடுபாடு உள்ளதாகி விடுகிறது.

மனிதர்கள் எல்லா காலங்களிலும் ஒரே விதமாக இருக்கிறார்கள். பெருமை என்பது எல்லா மனுஷருக்கும் ஒரு ஆபத்தான விஷயமாயிருக்கிறது. அப்போஸ்தலர் களாகிய யாக்கோபு, யோவான் என்பவர்களின் தாய் அவளுடைய குமாரர்கள் இருவரு க்கும் இயேசுவின் இராஜ்யத்தில் அவருடைய இரண்டு பக்கத்திலும் அமர வேண்டும் என்று வாஞ்சித்தாள் (மத்.20:20-28). இன்றைக்கு இருக்கிற மனிதர்களைப் போன்றுதான் அப்போஸ்தலர்கள் இருந்தார்கள் எல்லா மனிதரும் அதிகாரத்தை விரும்புகிறார்கள். நாம் மேன்மையான பதவிகளை விரும்புகிறோம். மனித சுபாவம் எப்பொழுதும் மாறாது.

இதன் காரணமாகவே சபையை ஆளுகை செய்வதற்கான தேவனுடைய திட்டத்தை கெடுத்து விடும் ஆபத்தே தற்சமயம் இருக்கிற ஒரு ஆபத்தாக இருக்கிறது. மனுஷர் இன்றைக்கு அடிக்கடி வழி நடத்துகிறவர்கள் ஆக வேண்டும் என்ற நம்பிக்கைகளுடனே மனுஷர் சபைக்குள்ளாக அடிக்கடி பிரவேசிப்பார்கள் இன்னும் பலர் அவர்களுக்கான



நீங்கள் கிறிஸ்தவனாக இல்லாவிட்டால், உங்களுடைய ஜீவனையும் வாழ்வின் பிரச்சனைகளையும் சந்திப்பது மிக மிகக் கடினமாயிருக்கும் ஏனென்றால் உலகம் உங்களுக்கு விரோதமாக இருக்கும். மேலும் நீங்கள் யார்? மற்றும் உண்மையாக நீங்கள் உதவிக்காக பார்க்கும் முக்கியமான உங்களுடைய முயற்சியின் நேரம் எது? இருந்தாலும்கூட நாங்கள், நீங்கள் உங்களுடைய ஜீவனையும், உங்களுடைய குடும்ப அங்கத்தினர்களையும், நண்பர்களையும் இன்னும் மற்றவர்களையும் நேசிக்கும்படி நீங்கள் திரும்புவீர்களென உங்களுக்கு உதவிசெய்யவும் ஆனால் அதையும்விட, நீங்கள் தேவனை நோக்கிப்பார்க்கவும் அவருடைய வார்த்தை உங்களுக்கு உதவிட உங்களை வழிநடத்தும்படிக்கும் உங்களை ஊக்கப்படுத்துகிறோம். தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் விசுவாசித்து, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்து நீங்கள் இரட்சிக்கப்படுவதே சிறந்த வழியாக இருக்கிறது. இப்படி நீங்கள் செய்வீர்களானால் கிறிஸ்து உங்களை இரட்சித்து (மாற்.16:16), தம்முடைய சபையில் உங்களை சேர்த்துக்கொள்ளுவார் (அப்.2:47). அதற்கப்புறம் நீங்கள் கர்த்தர் உங்களோடு இருப்பார் என்ற நிச்சயம் கொள்ளுவீர்கள் மேலும் கர்த்தர் உங்களுடைய பிரச்சனைகளில், வேதனைகளில் உங்களோடு இருப்பார் என்ற நிச்சயம் கொள்ளுவீர்கள். இதுமாத்திரமல்ல, ஆனால் நீங்கள் அவர்மேல் விசுவாசம் கொள்வீர்களானால், பின்பு அவர் ஒருபோதும் உங்களை கைவிட மாட்டார், ஆனால் கடைசியாக அவர் இதன் மூலம் வாக்குபண்ணின நித்திய ஜீவனாகிய வெற்றியைத் தருவார். (வெளி.2:10).

நாங்கள் உங்களுக்கு ஏதேனும் ஒருவழியில் உதவி செய்ய விரும்பினால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்பண்ணுங்கள். அதுவரை கர்த்தர் உங்களோடிருப்பாரக!

**ஜெபியுங்கள்**

- **உலக சமாதானத்திற்காக...**
- **உலகம் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...**
- **உலகமுழுவதும் சுவிசேஷம் தடையில்லாமல் அறிவிக்கப்பட...**
- **உலக ஜனங்கள் காக்கப்பட...**
- **உலகத்தில் மனிதநேயம் வளர...**




**பொது அறிவு சோதனை**

1. டெட்டானி நோய் உள்ளவர்களுக்கு தேவையான வைட்டமின் எது? 1) எ 2) பி 3) டி
2. பேய்லிஸ் என்பவர் எதைக் கண்டுபிடித்தார்?
1) ஹிமோகுளோபின் 2) ஹார்மோன்கள் 3) எண்டோகிரீம்ஸ்
3. இரத்த சிவப்பணுக்கள் உருவாகும் இடம்?
1) நுரையீரல் 2) இருதயம் 3) எலும்பு மஜ்ஜை
4. மனித உடலில் எத்தனை வகையான சுரப்பிகள் உள்ளன?
1) 3 2) 4 3) 2
5. உணவில் உள்ள இரும்பு சத்து பற்றாக்குறையால் ஏற்படுகிற நோய் எது?
1) ஸ்கர்வி 2) இரத்த சோகை 3) ஜியாடர்

விடை
1.3
2.2
3.3
4.3
5.2

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்

**நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்**

Evangelizing Our Friends

**தேவனைக் குறித்து உன்னுடைய நண்பர்களிடம் நீ எவ்வாறு பேசுகிறாய்?**

How Do You Talk To Your Friends About God?

**பாடம் -12**

*-Kevin Cauley*



**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

ஒருவர் இயேசுவைக் குறித்தும் அவர் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பது குறித்தும் பேசுவதன் மூலம் தன்னுடைய அன்பை தேவனுக்குக் காண்பிக்கலாம். அவர் நம்முடைய சிநேகிதராக இருக்கும்படி பரலோகத்தை விட்டு இறங்கி இந்த பூமிக்கு வந்தார், அவரே நம்முடைய இரட்சகர் (யோவா.15:13). அவருடைய வாழ்க்கை ஒரு முழு மனுஷனாக இருப்பதன் அர்த்தத்திற்கான ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது,

மேலும் ஆதாமின் வாழ்க்கைக்கு வெளியே நமக்காக ஒரு புதிய அடையாளத்தை ஏற்படுத்துகிறார் (1கொரி.15:22). இயேசு ஒரு சரியான பாவமற்ற வாழ்க்கையை வாழ்ந்தார் 1பேதுரு 2:22, **"அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை"** என்று சொல்கிறது. நாம் நீதிமான்களாக்கப்படும்படி அவர் பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார். பவுல் 2கொரி.5:21ல் **"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்"** என்று எழுதியுள்ளார். நாம் பாவமன்னிப்பைப் பெறும்படிக்கு இயேசு தம்மைத் தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அவர், **"ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்"** (யோவா.10:18). பவுல் இயேசு **"...நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்"** (கலாத்.1:4) என்று சொன்னார். இயேசுவின் சிலுவை மீதான மரணம் ஒருபோதும் ஒரு மனுஷனும் செய்யாத மாபெரும் அன்பின் செயலாக இருந்தது, ஏனென்றால் அவருடைய ஜீவன் அவருடைய நண்பர்களுக்காக மட்டும் அல்ல ஆனால் அவருடைய சத்துருக்களுக்காகவும் கொடுக்கப்பட்டது (ரோம.5:8). இயேசு நமக்காக என்ன செய்தார் என்று சொல்லுவதை நாம் ஒருபோதும் தவிர்த்துவிட முடியாது.


நம்முடைய ஜீவனுக்காக அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் நாம் தேவனை நேசிக்கிறோம். தேவனுடைய வார்த்தையை தனிப்பட்ட விதத்தில் கற்றுக்கொள்வதன் மூலம், நாம் ஞானத்தைக் கண்டடைவோம் (நீதி.1:1-7). தேவன் தம்முடைய வார்த்தையை கட்டளையிலும் திருஷ்டாந்தங்களிலும் வெளிப்படுத்தியிருக்கிறார் ஆகையால் கஷ்டமான சூழ்நிலைகளில் தேவன் நாம் என்ன செய்ய விரும்புகிறார் என நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இயேசு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரையும் இரட்சிக்கும்படிக்கு ஒப்புகொடுக்கிறார் (எபி.5:9). இயேசு பரத்திற்கு மீண்டும் திரும்பிச் செல்லுவதற்குச் சற்றுமுன், அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: **"...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"** (மாற்.16:15,16) **என்றார்.**

கிறிஸ்தவர்களாக நாம் தேவனுடைய வார்த்தையின்படி வாழும்படிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். எபேசியர்5:1,2ல் பவுல், **"ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" என்று எழுதினார். இதை அப்போஸ்தலனாகிய யோவான், "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்து கொள்ளுகிறோம். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1யோவா.5:2,3) என்றெழுதினார்.**

தேவனிடத்தில் உண்மையாக அன்புகூருவதற்கான வழி இதுவே என்று மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். நம்முடைய சுய நம்பிக்கை மற்றும் நமது சொந்த கருத்துக்கள் மூலம் நாம் தேவனிடத்தில் அன்புகூர முடியாது. நாம் எளிதான கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசித்து கிறிஸ்து நாம் செய்யும்படிக்கு என்ன சொல்லியிருக்கிறாரோ அதை நம் வாழ்வில் செய்யவேண்டும். நாம் நினைப்பதற்கு மாறாக அவருடைய வழி மெய்யாகவே **ஒரே** வழி. நம்முடைய நண்பர்களுடன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலைக் குறித்து பேசுவது என்பது மிகப்பெரிய காரியம்.

**தொடர்புடைய இவ்வேத வாக்கியங்களைப் படித்து விவாதியுங்கள்:**

நீதி.1:1-7, யோவான் 4:24,10:18,14:15, 15:13, ரோமர் 2:14, 5:18, 1கொரிந்தியர் 15:22, 2கொரிந்தியர் 5:21, கலாத்தியர் 1:4, எபேசியர் 5:1-2, எபிரெயர் 5:9, யாக்கோபு 1:19, 5:13, 1பேதுரு 2:22, 2பேதுரு 3:9, 1யோவான் 4:16, 5:2-3.




**வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு**

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -2**

**நாம் ஏன் சபையின் அமைப்பைக் குறித்து படிக்கவேண்டும்?**

**வரை குறிப்பு:**

1. ஆரம்ப காலங்களில் சபையின் அமைப்பில் விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப்போதல் இருந்தது.
2. மனித பெருமை எந்த வழிநடத்துதலையும் எளிதாக கெடுத்துப் போடுகிறது
3. பிராந்திய சபைகள் வழக்கமாக அவைகளை வழிநடத்துகிறவர்களைப் போன்று நன்மையானதாக அல்லது தீமையானதாக இருக்கின்றன

**கலந்துரையாடல்**

**1. ஆரம்ப காலங்களில் சபையின் அமைப்பில் விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப் போதல் இருந்தது.**

விசுவாசத்தை விட்டு விலகிப் போகிறவர்கள் இருப்பார்கள் என்று வேதாகமம்